ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிற கீழ்க்கண்ட சலுகைகளை கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறுவர் :—

1. வீட்டு மனைகள் வழங்குதல்.

2. குடிநீர் வழங்குவதற்காக கிணறுகள், குளங்கள் முதலிய வற்றை வெட்டுதல்.

3. சுகாதாரவசதிகள், நடைபாதைகள் ஏற்படுத்தல், தெரு விளக்குகள் போடுதல், சுடுகாடுகளை அல்லது இடுகாடுகளை ஏற்படுத்தல்.

4. (இச்சலுகைகளைப் பெறத்) தகுதியுள்ள வகுப்பினர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்காகப் பணியாற்றும் தனிப் பட்ட நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குதல்.

5. பயிரிடப்படுவதற்காக நிலத்தை ஒப்படை செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல்.

6. படிப்பு உதவித்தொகைகள் பள்ளி வசதிகள், மாணவ விடுதி வசதிகள், நண்பகல் உணவு வழங்கல்.

ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைக் கிறிஸ்தவர் களாக மதம் மாறிய ஹரிஜனங்களும் பெறத் தகுதியுள்ளவர் களாகச் செய்யும் பொருட்டு சட்டமியற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கோ. சி. மணி : தொழிற் படிப்பு முதலியவைகளுக்காக ஸ்காலர்ஷிப், விவசாயத்திற்காக வழங்கப்படும் மாட்டுக்கான கடன் முதலியவை, மற்றும் இலவசமாகக் கொடுக்கக்கூடிய சலுகை கள் எல்லாம் இந்து அரிசனங்களுக்கு வழங்குவதைப் போல கிறிஸ்துவ அரிசனங்களுக்கும் வழங்கப்படவில்லை என்பது பற்றிப் புகார் அரசாங்கத்திற்கு ஏதாவது வந்திருக்கிறதா? அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இதுபற்றி இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். சென்ட்ரல் கிராண்ட் ஸ்கீமின்கீழ்க் கொடுக்கும் சலுகைகள் மட்டும் இவர்களுக்குக் கொடுப்பதில்லை. மாநிலத்தைப் பொறுத்த வரையில், என்ன என்ன சலுகைகள் கொடுக்கிறோமோ, அந்தச் சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் உண்டு.

Court buildings

* 511 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any site has been chosen for location of the proposed new Court buildings at Madurai ;

(b) the estimated cost of the said work ; and

(c) when it is likely to be taken up for execution ?

THE HON. SRI V. RAMAIAH : (a) A site with an extent of 16·5 acres in the Managiri tank bed has been settled by the Government in consultation with the Collector of Madurai and the High Court ;

(b) Estimates are under preparation ; and

(c) It is likely to be taken up for execution immediately after estimates are finalised and got sanctioned.

திரு. வி. எஸ். எஸ். மணி : இப்பொழுது நீதி மன்றங்களெல்லாம் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அவற்றை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம் என்று கோரி ஏதாவது ஆட்சேபணை மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இரண்டு மாவட்டங்களினுடைய மாவட்ட நீதிபதிகளும், கலெக்டர்களும் இடத்தைச் சென்று பார்த்துவிட்டு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதிலே காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : புது இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கான விவரத்தைத்தான் சொன்னேன். மற்ற விவரங்கள் வேண்டுமானால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வி போட்டால், அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

Inland waterways

* 555 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have appointed any Committee for a traffic-study of three inland waterways in the State, viz., the Buckingham Canal, the Vedaranyam Canal and the Cooum river ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Committee consists of the following members :—

1. Chief Engineer (Irrigation).

2. Officer on Special Duty, Tuticorin Area Development Project, Public Works Department.

3. Deputy Secretary to Government (Major Industries), Industries, Labour and Housing Department.

4. State Port Officer.

The Committee's report is awaited.

திரு. கு. ப. அழகமுத்து : இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? இந்தக் கமிட்டி தன்னுடைய பணியை முடிப்பதற்கு ஏதாவது காலவரையறை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?